**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**

**27.07.2018 ம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**

**தலைமை– திருமதி.பார்வதி.எம்.ஏ., தனி அலுவலர்**

1) கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருவாளர்.ராஜ் அட்வர்டைசிங், கோவை அவர்கள் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் பலகைகள் மைசூர் சாலை பகுதியில் 10 எண்ணிக்கையும் கள்ளிக்கோட்டை சாலை பகுதியில் 10 எண்ணிக்கையும் தேவர்சோலை சாலை பகுதியில் 10 எண்ணிக்கையும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உபயோக படுத்த கூடாது என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிரந்தர விளம்பர பலகைகள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்கான செலவினம் ரூ.4500/– (30x150) ற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியில் பணி புரியும் ஒப்பந்தபணியாளர்கள் 80 நபருக்கு தொழிலாளர் துணை ஆய்வாளர் அலுவலகம்,கோவை அவர்களிடம் (Prinicipal Employer) ஆணையர், கூடலூர் நகராட்சி என்ற பெயரில் பதிவு செய்ய கருவூலம் செல்லான் எடுக்க ஆகும் செலவினம் தொகை ரூ.5000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

3) இந்நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள Fire Extinguisher ல் பொதுப்பிரிவு, பொது சுகாதாரபிரிவில் உள்ள 3 Fire Service க்கு Dry Chemical Powder Refilling செய்ததற்கான தொகை ரூ.1593/– ஐ Surya Fire Service, Coimbatore அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

4) கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள், மதுபானக்கடைகள், தங்கும் விடுதிகள், வணிகம் சார்ந்த கடைகள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1 நாள் 21.05.2018 ல் தெரிவித்துள்ளப்படி தொழில்வரியை 25% குறையாமலும், 35% மிகமாலும், மேலும் ஒரு வருடத்திற்கு ரூ.2500/– க்கு மிகமாலும் 5 ஆண்டுகளுக்கு மறு நிர்ணயம் செய்ய அரசாணை எண் MS NLL நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1989 ல் தெரிவிக்கப்பட்டுள்ள, ஏற்கனவே இந்நகராட்சியில் 01.10.2013 ல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்டு தற்பொழுது 30.09.2018 அன்றுடன் 5 ஆண்டுகள் முடிவடைவதால் 01.10.2018 முதல் 25% தொழில்வரியை (2018–2019 இரண்டாம் அரையாண்டு) கீழ்கண்ட பட்டியலில் உள்ள விபரப்படி உயர்த்திகொள்ளவும், மாவட்ட அளவிலான தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் தொழில் உயர்வு செய்து வெளியிடப்பட்டு 30 நாட்கள் முடிவடைந்தும் எந்த ஒரு ஆட்சேபனையும் வரப்பெறவில்லை. எனவே கீழ்கண்ட தொழில்வரி பட்டியலில் உள்ளபடி 01.10.2018 முதல் தொழில்வரி பிடித்தம் செய்ய மன்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | அரையாண்டிற்கு வருமானம் | 01.10.2013 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட்ட விபரம் | 01.10.2018 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | ரூ .20001 /- வரை | – | – |
| 2 | ரூ.20001 முதல் ரூ .30000 /- வரை | ரூ.120/- | ரூ.150/- |
| 3 | ரூ30001 முதல் ரூ .45000 /- வரை | ரூ.300/- | ரூ.375/- |

| | | | |
|---|---|---|---|
| 4 | ரூ.45001 முதல் ரூ .60000 /- வரை | ரூ.590/- | ரூ.738/- |
| 5 | ரூ.60001 முதல் ரூ .75000 /- வரை | ரூ.890/- | ரூ.1113/- |
| 6 | ரூ.75001 முதல் அதற்கு மேலும் | ரூ.1175/- | ரூ.1250/- |

**அலுவலக குறிப்பு –**

**1.** ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள தொழில்வரியை **25%** க்கு குறையாமலும் **35%** க்கு மிகாமலும் ஒரு ஆண்டிற்கு ரூ.**1250/–** க்கு மிகாமல் உயர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**2.** தினசரி செய்திதாள் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

5) இந்நகராட்சி ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள (TN 43 Z 4203) பொலீரோ வாகனத்திற்கு நான்கு டயர்கள் புதியதாக விநியோகம் பெற விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | உள்ளூர் வைலப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள (TN 43 Z 4203) பொலீரோ வாகனத்திற்கு நான்கு டயர்கள் விநியோகம் செய்தல் | M/S.ஸ்ரீ ஹரி டயர்ஸ் | **ரூ.31950/–** |
| | | M/S.ராஜாளி டயர்ஸ் | **ரூ.32450/–** |
| | | M/S /பவர் பென் டயர்ஸ் | **ரூ.32500/–** |

**அலுவலக குறிப்பு –** மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S.ஸ்ரீ ஹரி டயர்ஸ் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கும் (TN 43 Y 0437) ஈப்பு வாகனம் டயர்கள் கடந்த **22.02.2017** ம் ஆண்டு **72** கீ.மீ பெறப்பட்டு தற்போது **123500** கீ.மீ.இயக்கப்பட்டுள்ளதால் வாகனத்தின் டயர்கள் தேய்மானம் ஏற்பட்டுள்ளது. புதிய நான்கு டயர்கள் வாங்க ஆகும் செலவின தொகை ரூ.**34000/–** ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

7) முதியோர் உதவித் தொகை, விதவை உதவி தொகை, முதிர்கன்னி மாற்றுத் திறனாளி மற்றும் DDWP உதவி தொகை பெறுவதற்கு வறுமை கோட்டின்கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 4 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.முஹம்மது, த/பெ.குஞ்சாலி,2/108, மேல் கூடலூர், கூடலூர் | – | முதியோர் |
| 2 | திருமதி.வெள்ளச்சி, க/பெ.சிநாதன்,1/462,ஒ.வி.எச் சாலை,மேல் கூடலூர் | – | முதியோர் |
| 3 | செல்வி.மோளி,த/பெ.அகஸ்டின்,12/290A1, புத்தூர்வயல், கூடலூர் | – | மாற்றுதிறனாளி |
| 4 | செல்வி.ரோசம்மா, த/பெ.அகஸ்டின், 16,181, புத்தூர்வயல், கூடலூர். | – | முதிர்கண்ணி |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

8) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் குடிநீர் பணியாளர்கள் மற்றும் மின் பணியாளருக்கு 19 நபர்களுக்கு மழைக்கோட்டு வழங்க தீர்மானம் எண் ... ... ... நாள்... ... ... ...2018 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மழைகோட்டு விநியோகம் பெற விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | | |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் குடிநீர் பணியாளர்கள் மற்றும் மின் பணியாளருக்கு 19 நபர்களுக்கு மழைக்கோட்டு விநியோகம் பெறுதல் | M/s. ஸ்ரீ மாசானி டெக்ஸ்டையில் | M/s. கல்யாணி டெக்ஸ்டையில் | M/s. ராஜா டெக்ஸ்டையில் |
| | | ரூ.25650/– | ரூ.26600/– | ரூ.27550/– |

**அலுவலக குறிப்பு –** மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.ஸ்ரீ மாசானி டெக்ஸ்டையில் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு தொகையினை ரூ.25650/– வழங்க மன்ற அனுமதிக்கு.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**